**காய்கறி வரத்து அதிகரிப்பு: விலை சரிவு**

First Published : 05 Dec 2011 04:03:16 AM IST



சென்னை, டிச. 4: காய்கறி வரத்து அதிகரித்துள்ளதால் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.

சென்னை கோயம்பேடு மார்கெட்டுக்கு ஆந்திரம், கர்நாடக மாநிலங்களிலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் தினமும் காய்கறிகள் வருகின்றன.

தமிழகத்தில் அண்மையில் பெய்த மழை காரணமாக காய்கறி வரத்து குறைந்து காணப்பட்டது. ஆனால், இப்போது மழை குறைந்துள்ளதால் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் காய்கறிகளின் விலையும் குறைந்துள்ளது. குறிப்பாக, கேரட், பீன்ஸ், அவரைக்காய் ஆகியவற்றின் விலை பெருமளவு குறைந்துள்ளது.

மொத்த விலைக் கடையில் காய்கறிகளின் விலை (பழைய விலை அடைப்புக் குறிக்குள்):

தக்காளி - ரூ. 15 (ரூ. 18), கத்தரிக்காய் - ரூ. 8 (15), சின்ன வெங்காயம் - ரூ. 20 (ரூ. 30), உருளைக்கிழங்கு - ரூ. 13 (16), கேரட் - ரூ. 18 (30), பீன்ஸ் - ரூ. 15 (25), அவரைக்காய் - ரூ. 15 (23), சேப்பங்கிழங்கு - ரூ. 10 (15), சேனைக்கிழங்கு - ரூ. 13 (18), சுரைக்காய் - ரூ. 8 (12), முள்ளங்கி - ரூ. 10 (15), செப்செப் - ரூ. 8 (15), பச்சை மிளகாய் - ரூ. 12 (16).

இந்த விலையை விட ரூ. 2 அல்லது ரூ. 3 அதிகமாக சில்லறை விற்பனைக் கடைகளில் காய்கறிகள் விற்கப்படுகின்றன. காய்கறிகளின் விலை குறைந்ததையடுத்து, கோயம்பேடு மார்க்கெட்டில் மக்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது.

**ஏரிகளில் நீரின் அளவு**

First Published : 05 Dec 2011 02:42:36 AM IST



சென்னை, டிச.4: சென்னைக்கு குடிநீர் வழங்கும் முக்கிய ஏரிகளில் தற்போதுள்ள நீரின் அளவு பின் வருமாறு:

பூண்டி: நீர் வரத்து வினாடிக்கு 319 கனஅடி. வெளியேற்றப்படும் நீரின் அளவு வினாடிக்கு 20 கனஅடி. ஏரியின் நீர் மட்ட உயரம் 35 அடி. ஏரியின் நீர் அளவு 33.11 அடி.

சோழவரம்: நீர் வரத்தும், நீர் வெளியேற்றமும் இல்லை. ஏரியின் நீர் மட்ட உயரம் 17.86 அடி. ஏரியின் நீர் அளவு 17.42 அடி.

புழல்: நீர் வரத்து வினாடிக்கு 356 கனஅடி. வெளியேற்றப்படும் நீரின் அளவு வினாடிக்கு 680 கனஅடி. ஏரியின் நீர் மட்ட உயரம் 21.20 அடி. ஏரியின் நீர் அளவு 19.59 அடி.

செம்பரம்பாக்கம்: நீர் வரத்து வினாடிக்கு 243 கனஅடி. வெளியேற்றப்படும் நீரின் அளவு வினாடிக்கு 150 கனஅடி. ஏரியின் நீர்மட்ட உயரம் 24 அடி. ஏரியின் நீர் அளவு 20.36 அடி.

புதிய வீராணம்: நீர் வரத்து வினாடிக்கு 500 கன அடி. வெளியேற்றப்படும் நீரின் அளவு வினாடிக்கு 21 கனஅடி. ஏரியின் நீர்மட்ட உயரம் 15.60 அடி. ஏரியின் நீர் அளவு 12.30 அடி.

**அணைக்கு மத்திய போலீஸ் பாதுகாப்பு: பிரதமருக்கு முதல்வர் ஜெயலலிதா கடிதம்**

First Published : 05 Dec 2011 03:15:50 AM IST

Last Updated : 05 Dec 2011 05:02:28 AM IST



சென்னை, டிச.4: முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் நடைபெற்றுள்ள வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, அங்கு மத்திய தொழில் பாதுகாப்புப் படை போலீஸôரை பாதுகாப்புப் பணியில் உடனடியாக ஈடுபடுத்த வேண்டும் என்று முதல்வர் ஜெயலலிதா கோரியுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் மன்மோகன் சிங்குக்கு அவர் ஞாயிற்றுக்கிழமை எழுதியுள்ள கடிதம்:

"முல்லைப் பெரியாறு அணையின் பாதுகாப்புக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

முல்லைப் பெரியாறு அணைப் பகுதியில் கேரள மாநிலத்தில் உள்ள அரசியல் கட்சிகள் வன்முறைச் சம்பவங்களை அரங்கேற்றியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அணைப் பகுதியில் உள்ள தமிழ்நாடு மின்வாரிய அலுவலகத்தின் வாயிலை 200 பேருக்கும் அதிகமானோரைக் கொண்ட வன்முறைக் கும்பல் சனிக்கிழமை சேதப்படுத்தியுள்ளது.

கேரள மாநிலத்தில் உள்ள வல்லக்கடவு பகுதியில் இருந்து, சிந்திக்கும் திறனற்ற சில நபர்கள் அணையிலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், அணையைச் சேதப்படுத்துவதற்காகவும் ஜேசிபி இயந்திரத்துடன் அணைப் பகுதியை நோக்கிச் சென்றுள்ளனர்.

நான் ஏற்கெனவே தெரிவித்தவாறு கேரள அரசு மேற்கொண்டுள்ள மக்களை பயமுறுத்தும் பிரசாரமானது, அணையின் பாதுகாப்பையே அச்சுறுத்தும் சூழலை உருவாக்கியுள்ளது.

முல்லைப் பெரியாறு அணையை விட பழமையான அணைகள் இப்போதும் செயல்பாட்டில் உள்ளதை உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழகத்தில் உள்ள கல்லணையானது கரிகால சோழனால் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. சுமார் 1,900 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த அணை, இப்போதும் எந்தவிதப் பிரச்னையும் இன்றி செயல்பட்டு வருகிறது.

இத்தனை ஆண்டுகள் இந்த அணை செயல்பாட்டில் உள்ளதற்குக் காரணம் அணை சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருவதுதான். காவிரி டெல்டா மாவட்டங்களில் உள்ள மக்கள் இந்த அணை தொடர்பாக எந்தவித அச்சமும் இன்றி உள்ளனர்.

அதேபோல், ஆந்திர நீர்வளத் துறை சார்பில் பராமரிக்கப்பட்டு வரும் கோதாவரி அணை, கிருஷ்ணா தடுப்பணை ஆகியவை முறையே 1845, 1855 ஆகிய ஆண்டுகளில் கட்டப்பட்டவை ஆகும்.

கல்லணையைக் கட்டுவதற்கு கரிகால சோழன் பயன்படுத்திய கருங்கல் மற்றும் சுண்ணாம்பு காரை ஆகியவற்றையே, முல்லைப் பெரியாறு அணையைக் கட்டுவதற்கும் பென்னி குயிக் பயன்படுத்தியுள்ளார் என்பதையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

முல்லைப் பெரியாறு அணைக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டாலும், அதிலிருந்து வெளியேறும் தண்ணீரை இடுக்கி நீர்த்தேக்கமும், குலமாவு, சிறுதாணி அணைகளும் தாங்கும் என்று கேரள மாநில அரசின் தலைமை வழக்குரைஞர், அந்த மாநில உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக அந்த மாநில அரசே கேரள உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

கேரள மாநில மக்களிடையே எல்லை கடந்த அச்ச உணர்வை அந்த மாநில அரசு உருவாக்கியுள்ளது. இந்தச் சூழ்நிலையைப் பக்குவமாகக் கையாள பிரதமர் அளவிலான அறிவார்ந்த, முதிர்ச்சியான தலைமை தேவைப்படுகிறது.

அணைப் பகுதியில் நடைபெற்றுள்ள வன்முறை சம்பவங்களைப் பார்க்கும்போது, அணைக்கு உடனடியாக மத்தியப் போலீஸôரின் பாதுகாப்பு தரப்பட வேண்டியது அவசியமாகிறது.
எனவே, முல்லைப் பெரியாறு அணைக்கு அங்குள்ளவர்களால் ஆபத்து ஏற்படுத்துவதைத் தடுக்க அங்கு மத்திய தொழில் பாதுகாப்புப் படை போலீஸôரை பாதுகாப்புப் பணியில் உடனடியாக ஈடுபடுத்த வேண்டும்' என்று கோரியுள்ளார் முதல்வர் ஜெயலலிதா.

**மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க ஒருங்கிணைந்து செயல்படுவோம்: வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு**

First Published : 04 Dec 2011 11:37:20 AM IST

காரைக்கால், டிச. 3: மக்கள் பிரச்னைகளைத் தீர்க்க கட்சி வேறுபாடுகளை மறந்து, காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவோம் என்றார் புதுவை வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு.

புதுச்சேரி அரசின் சமூக நலத் துறை சார்பில் உலக மாற்றுத் திறனாளிகள் தின விழா காரைக்காலில் சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு தலைமை வகித்து, அமைச்சர் மு. சந்திரகாசு மேலும் பேசியது:

புதுவை முதல்வர் என். ரங்கசாமி மாற்றுத் திறனாளிகளுக்காக பல்வேறு சலுகைகளை அறிவித்து, செயல்படுத்தி வருகிறார்.

காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 5 சட்டப்பேரவை உறுப்பினர்களும் தனித் தனியாக செயல்படுவதாக சிலர் கூறுகின்றனர். அரசியலில் எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால், மக்கள் பிரச்னை என்று வரும் போது 5 பேரும் ஒற்றுமையாக இருந்து பணியாற்றுவோம்.

மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் அளிக்க ஆணையம் அமைக்கப்படும் என்று புதுவை முதல்வர் அறிவித்துள்ளார். மாற்றுத் திறனாளிகள் கல்வி உதவித் தொகை ரூ. 250 என்பதை ரூ. 1000-மாக உயர்த்திய அறிவிப்பும், இறந்தவர் குடும்பத்துக்கு ரூ. 2 ஆயிரம் என்றிருந்தது ரூ. 5 ஆயிரம் உயர்த்திய அறிவிப்பும், அடுத்த மாதம் முதல் செல்போன் தரப்படும் என்ற அறிவிப்பையும் முதல்வர் புதுச்சேரியில் நடந்த மாற்றுத் திறனாளிகள் விழாவில் வெளியிட்டுள்ளார்.

புதுச்சேரி மாநிலத்தில் ரங்கசாமி அரசு பொறுப்பேற்ற பின்னர் அனைத்துத தரப்பினரும் பயன்டைந்துள்ளனர் என்றார் அமைச்சர்.

விழாவையொட்டி, நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் பரிசுகளை வழங்கினார்.

விழாவில், சட்டப்பேரவை உறுப்பினரும், புதுச்சேரி மின் திறல் குழுமத் தலைவருமான பி.ஆர். சிவா, பேரவை உறுப்பினர்கள் ஏ.எம்.எச். நாஜிம், பி.ஆர்.என். திருமுருகன், திட்டத் துறை இணை இயக்குநர் ஆர். மோகன், அரசு மருத்துவமனை மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் எம். கந்தசாமி, மாவட்ட அனைவருக்கும் கல்வித் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ. ஞானப்பிரகாசம், மாவட்ட ஊனமுற்றோர் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் சாகுல் ஹமீது, பொதுச் செயலர் நடேச வைத்தியநாதன் உள்ளிட்டோர் பேசினர்.

**மாற்றுத் திறனாளிகளை காக்க வைத்த அமைச்சர்**

விழா 11 மணிக்கு தொடங்கும் என்று அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தாலும், சட்டப்பேரவை உறுப்பினர் நாஜிம், திருமுருகன் ஆகியோர் மட்டுமே விழா தொடங்குவதற்கு முன்னதாக மேடைக்கு வந்தனர்.

அமைச்சர் சந்திரகாசு சுமார் 12.25 மணிக்கே மேடைக்கு வந்தார். திருநள்ளாறு தொகுதி எம்எல்ஏ பி.ஆர். சிவா 12.45 மணி அளவிலேயே மேடைக்கு வந்தார்.

இதனால், விழா தொடங்கியதும், பேசத் தொடங்கிய மாற்றுத் திறனாளி ஒருவர், நாங்கள் பல மணி நேரமாக காத்திருக்கிறோம். பேருந்து, மருத்துவமனையென எங்கும் எங்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை. அமைச்சர்கூட மாற்றுத் திறனாளிகளை அலட்சியப்படுத்துவது எல்லோருக்கும் வேதனையை அளிக்கிறது என்றார்.

பின்னர், பேசிய அமைச்சர், தாமதமாக வரவேண்டும் என்பது எனது நோக்கமல்ல, முன்னதாக பல பணிகள் செய்ய வேண்டியிருந்தது. மாற்றுத் திறனாளிகள் உள்ளிட்ட பலர் என்னை சந்திக்க வந்தனர். அவர்களது கோரிக்கைகளை கேட்டு முடித்து விழாவுக்கு வர தாமதம் ஆனாது என்றார்.

**விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்புப் பயிற்சி**

First Published : 04 Dec 2011 11:30:57 AM IST

பெரம்பலூர், டிச. 3: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், அண்மையில் பெய்த மழையால் பூச்சி நோயிலிருந்து பயிரைப் பாதுகாப்பது தொடர்பான பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் சி. சங்கர், து. கதிரவன் மற்றும் மு. மணிகண்டன் ஆகியோர் பி.டி பருத்தி, மக்காச்சோளம், மஞ்சள், கருணை, நெல், மரவள்ளி, மிளகாய், வெங்காயம் மற்றும் கோலியஸ் ஆகிய பயிர்களில், கடந்த சில நாள்களாக பெய்த மழையினால் ஏற்பட்ட பூச்சி நோயிலிருந்து பயிரைக் காப்பாற்றுவது குறித்தும், பருத்தியில் நுண்ணூட்ட மேலாண்மை, பூச்சி மேலாண்மை, பூஞ்சாணம் மற்றும் பாக்டீரிய நோய்

மேலாண்மை, தாவர நூல்புழு மேலாண்மை, பி.டி பருத்தியில் புதியதாக பரவி வரும் புகையிலை கீற்று வைரஸ் நோய் மற்றும் நெல்லில் தோன்றும் ஆனைக்கொம்பன் ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான பயிற்சி அளித்தனர்.

அதைத்தொடர்ந்து, வயல்வெளி ஆய்வு, செயல் விளக்கங்கள், பாதிக்கப்பட்ட வயலை நேரில் சென்று பார்வையிடுதல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது இப்பயிற்சியில், தொண்டப்பாடி, கை.களத்தூர், நூத்தப்பூர், வயலப்பாடி, பசும்பலூர், நாரணமங்கலம், அனுக்கூர் குடிகாடு, சிறுவயலூர், திருவாளந்துறை, வேப்பந்தட்டை, புதுவேட்டக்குடி, கூடலூர், இரூர், மாவலிங்கை, வீ. களத்தூர், பெருநிலா, புதுக்குறிச்சி, பாதாங்கி, வடகரை, வெண்பாவூர், கூத்தூர், புதூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச் சிக்கான ஏற்பாடுகளை, முதுநிலை ஆராய்ச்சியாளர் சரவணன் மற்றும் களப்பணியாளர்கள் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு பயிர் பாதுகாப்புப் பயிற்சி**

First Published : 04 Dec 2011 11:30:57 AM IST

பெரம்பலூர், டிச. 3: பெரம்பலூர் மாவட்டம், வாலிகண்டபுரத்தில் உள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், அண்மையில் பெய்த மழையால் பூச்சி நோயிலிருந்து பயிரைப் பாதுகாப்பது தொடர்பான பயிற்சி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர்கள் சி. சங்கர், து. கதிரவன் மற்றும் மு. மணிகண்டன் ஆகியோர் பி.டி பருத்தி, மக்காச்சோளம், மஞ்சள், கருணை, நெல், மரவள்ளி, மிளகாய், வெங்காயம் மற்றும் கோலியஸ் ஆகிய பயிர்களில், கடந்த சில நாள்களாக பெய்த மழையினால் ஏற்பட்ட பூச்சி நோயிலிருந்து பயிரைக் காப்பாற்றுவது குறித்தும், பருத்தியில் நுண்ணூட்ட மேலாண்மை, பூச்சி மேலாண்மை, பூஞ்சாணம் மற்றும் பாக்டீரிய நோய் மேலாண்மை, தாவர நூல்புழு மேலாண்மை, பி.டி பருத்தியில் புதியதாக பரவி வரும் புகையிலை கீற்று வைரஸ் நோய் மற்றும் நெல்லில் தோன்றும் ஆனைக்கொம்பன் ஈ ஆகியவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான பயிற்சி அளித்தனர்.

அதைத்தொடர்ந்து, வயல்வெளி ஆய்வு, செயல் விளக்கங்கள், பாதிக்கப்பட்ட வயலை நேரில் சென்று பார்வையிடுதல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றது இப்பயிற்சியில், தொண்டப்பாடி, கை.களத்தூர், நூத்தப்பூர், வயலப்பாடி, பசும்பலூர், நாரணமங்கலம், அனுக்கூர் குடிகாடு, சிறுவயலூர், திருவாளந்துறை, வேப்பந்தட்டை, புதுவேட்டக்குடி, கூடலூர், இரூர், மாவலிங்கை, வீ. களத்தூர், பெருநிலா, புதுக்குறிச்சி, பாதாங்கி, வடகரை, வெண்பாவூர், கூத்தூர், புதூர் உள்ளிட்ட கிராமங்களைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச் சிக்கான ஏற்பாடுகளை, முதுநிலை ஆராய்ச்சியாளர் சரவணன் மற்றும் களப்பணியாளர்கள் செய்திருந்தனர்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**திருந்திய நெல் சாகுபடி முறையில் விவசாயிகள் ஆர்வம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,03:04 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர்:திருந்திய நெல் சாகுபடி முறையில், மாவட்ட விவசாயிகள் ஆர்வமாக ஈடுபட்டுள்ளதாக, திருவள்ளூர் கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி கூறினார்.
குறைவான செலவு, அதிக மகசூல் கிடைக்கும் வகையில், திருந்திய நெல் சாகுபடி திட்டம், மாவட்டத்தில் செயல்பட்டு வருகிறது. விவசாயிகளுக்குத் தேவையான ஆலோசனைகள், வசதிகள், மானியங்களை, மாவட்ட வேளாண்மை துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் தோட்டக்கலை துறையினர் வழங்கி வருகின்றனர்.
திருந்திய நெல் சாகுபடி முறையை கடைப்பிடிக்கும், திருப்பாச்சூர் கதிரேசன் என்ற விவசாயி கூறும்போது, ""சாதாரணமாக நெல் பயிரிட ஏக்கருக்கு, 15 ஆயிரம் வரை செலவாகும். 30 மூட்டை நெல் கிடைக்கும். திருந்திய நெல், 10 ஆயிரம் செலவாகும், 36 மூட்டை நெல் கிடைக்கும். செலவும் குறைவு," என்றார்.

களையெடுக்கும் இயந்திரம்ஆட்கள் பற்றாக்குறை நிலவும் இக்காலத்தில், களை எடுக்கும் இயந்திரங்கள், உழும் இயந்திரங்களை, வேளாண் பொறியியல் துறையினர், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டம் மூலம், வழங்கி வருகின்றனர். திருந்திய நெல் சாகுபடி முறை, கரும்பு, பூ தோட்டங்களில் உள்ள களைகளை களைய இயந்திரங்கள், மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதன் மூலம், 1 மணி நேரத்தில் முக்கால் ஏக்கரில் களை எடுத்து விட முடியும். மேலும், நிலத்தை உழுவதற்கு மினி டிராக்டரும், மானிய விலையில் வழங்கப்படுகிறது.இயந்திரங்களைப் பயன்படுத்திய விவசாயி அசோக்குமார் கூறும் போது, ""இந்த இயந்திரம் வந்த பின், நிலத்தை ஒரு முறை உழுதாலே போதுமானதாக உள்ளது. விளைச்சலும் அதிகம் கிடைக்கிறது," என்றார்.துல்லிய பண்ணைத் திட்டம்எல்லாபுரம் ஒன்றியம், பெரிய கிளாம்பாக்கத்தைச் சேர்ந்த ரோஸ் என்ற விவசாயி கூறும்போது, ""40 சென்ட் நிலத்தில், துல்லிய பண்ணைத் திட்டம் மூலம், வெண்டைக் காய் பயிரிட்டுள்ளேன். சாதாரண முறையில் பயிரிட்ட வெண்டைக்காயை, நான்

கோயம்பேடு மார்க்கெட்டிற்கு எடுத்துச் சென்றால், வியாபாரிகள் நீண்டநேரம் கழித்து, குறைந்த விலைக்கு எடுத்துக் கொள்வர்.

ஆனால், இப்போதோ, மார்க்கெட்டிற்கு சென்றதுமே என் வெண்டைக்காயை எடுத்துக் கொள்கின்றனர்," என்றார்,இது குறித்து, திருவள்ளூர் கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி கூறும்போது, ""வேளாண் துறைக்கு, விவசாயிகளுக்கு மானிய விலையில் இயந்திரங்கள் வழங்க, நடப்பாண்டில், 67.3 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், சிறு, குறு விவசாயிகள் சொட்டு நீர் பாசனம் மூலம் விவசாயம் செய்ய, 100 சதவீத மானியம் வழங்கப்படும். பெரிய விவசாயிகளுக்கு, 75 சதவீதம் மானியம் வழங்கப்படும். மாவட்டத்தில் திருந்திய நெல் சாகுபடி மற்றும் இயந்திரங்கள் பயன்படுத்தவும், விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர்," என்றார்.

**விவசாயிகளுக்கு பயிர்க்கடன்:கலெக்டருக்கு கோரிக்கை மனு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,02:46 IST

கருத்தை பதிவு செய்ய

புவனகிரி:புவனகிரி பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கக் கோரி கலெக்டருக்கு கை கொடுக்கும் கை அமைப்பு கோரிக்கை வைத்துள்ளது.

இதுகுறித்து அமைப்பின் நிறுவனர் முகமது ரபீக் கலெக்டருக்கு அனுப்பியுள்ள மனு:புவனகிரி பகுதியில் வசித்து வரும் விவசாயிகள் கீழ்புவனகிரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் 1,000க்கும் மேற்பட்டோர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் கடந்த ஆண்டு பயிர் கடன் வழங்கக்கோரி விண்ணப்பித்தும் பயிர் கடன் வழங்கவில்லை.நடப்பு ஆண்டு விவசாயம் முடியும் தருவாயிலும் விவசாயிகள் பலரும் விண்ணப்பித்தும் இதுவரை பயிர் கடன் வழங்குவது குறித்து அவர்களுக்கு தகவல் இல்லை. விவசாயிகளுக்கு அரசின் பயிர்கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் உண்ணாவிரதம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,00:52 IST

கருத்தை பதிவு செய்ய

செஞ்சி:தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் கோரிக்கைகளை வலியுறுத்தி செஞ்சியில் உண்ணாவிரதம் இருந்தனர்.கரும்பு வெட்டுக்கூலியை ஆலை நிர்வாகம் ஏற்க வேண்டும். கரும்பு டன்னுக்கு 3,000 ரூபாய் வழங்க வேண்டும். உரவிலை உயர்வை தடுக்க வேண்டும். உர மானியத்தை மீண்டும் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி

தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கத்தினர் நேற்று செஞ்சியில் உண்ணாவிரதம் இருந் தனர்.தாலுகா அலுவலகம் முன்பு நடந்த உண்ணாவிரதத்திற்கு சங்க தலைவர் குண்டு ரெட்டியார் தலைமை தாங்கினார். துணை தலைவர் வீராசாமி, ரவிச்சந்திரன், வெங்கடேசன், அய்யப்பன், நாராயண சாமி முன்னிலை வகித்தனர். இந்திய தொழிற்சங்க மைய நிர்வாகி கோவிந்தசாமி, மாவட்ட செயலா ளர் சுப்பிரமணியன், சிறப்பு தலைவர் மாதவன், நிர்வா கிகள் நெடுஞ்சேரலாதன், முருகன் பங்கேற்றனர்.

**புதூரில் மூங்கில் சாகுபடி ஒரு நாள் முனைப்பு முகாம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,00:38 IST

கருத்தை பதிவு செய்ய

தா.பேட்டை: தா.பேட்டையில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு மூங்கில் சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதற்காக மூங்கில் சாகுபடி பற்றிய ஒரு நாள் முனைப்பு முகாம் தேவானூர் புதூர் கிராமத்தில் நடந்தது. முகாமிற்கு வேளாண்மை உதவி அலுவலர் செல்வம் வரவேற்றார். பஞ்சாயத்து தலைவர் பாலசுப்பிரமணியன், துணைத்தலைவர் கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொ) ரவிச்சந்திரன், தோட்டக்கலை அலுவலர் முருகன் தØ லமை வகித்து மூங்கில் சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். பயிற்சியில் மூங்கிலின் வகைகள், மூங்கில் சாகுபடிக்கு ஏற்ற காலநிலை, மண்வகைகள், நடவு முறை, திசு வளர்ப்பு, கன்றுகளை எவ்வாறு நடவு செய்வது, பக்க குறுத்துக்களை எவ்வாறு பராமரிப்பது, தண்ணீர் நிர்வாகம், உரநிர்வாகம், எந்தந்த கழிகளை அறுவடை செய்வது போன்ற தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு விளக்கி கூறப்பட்டது. முகாமில் வார்டு கவுன்சிலர்கள், பகுதி விவசாயிகள் உட்பட பலர் பங்கேற்றனர். முகாமிற்கான ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் எடிசன், ஜெயகுமார் ஆகியோர் செய்திருந்தனர். வேளாண் உதவி அலுவலர் முருகானந்தம் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு அழைப்பு கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பு ஊசி போடணும்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,00:36 IST

கருத்தை பதிவு செய்ய

கரூர்: "கோமாரி நோய் தடுப்பு ஊசியை விவசாயிகள் முன்னெச்சரிக்கையாக கால்நடைகளுக்கு அளித்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும்' என கரூர் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: கோமாரி நோய் மாடு, எருமை ஆடு, பன்றிகள் முதலிய கால்நடைகளை தாக்குகிறது. கிராமப்புறங்களில் கால்கட்டு மற்றும் வாய்ச்சப்பை என்றும் அழைப்பர். நோயற்ற கால்நடைகளுக்கு கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு மற்றும் குளம்புகளுக்கு இடையே கொப்புளங்களை மற்றும் புண்கள் காணப்படும். நோயற்ற கால்நடைகளின் உழிழ்நீர், சிறுநீர், பால், சாணம் மற்றும் உபயோகப்படுத்திய தண்ணீர் மற்றும் தீவனத்தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறை முகமாகவோ கோமாரி நோய் பரவுகிறது.

கோமாரி நோய் தாக்குதலால் கறவை மாடுகளில் பால் உற்பத்தியும் எருதுகளில் வேலைத்திறனும் குறையும். கறவைமாடு சினைப்பிடிப்பது தடைபடும். இளம் கன்றுகளில் அதிகளவில் இறப்பு நேரிடும். கடுமையான நோய் கிளர்ச்சியால் 50 விழுக்காடு அளவுக்கு மாடுகள் இறக்க நேரிடும். எனவே, கால்நடைகளில் அதிக பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் இந்த கோமாரி நோய் இனிவரும் மழை மற்றும் குளிர் காலங்களில் கால்நடைகளை தாக்க வாய்ப்புள்ளது. இதனை தடுக்க தற்போது மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை மூலம் தங்கள் கிராமங்களுக்கே வந்து கால்நடை டாக்டர்கள் மூலம் இலவசமாக அளிக்கப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆத்தூரில் மஞ்சள் ஏலம்: ரூ.40 லட்சம் வர்த்தகம்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,01:08 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,100 மூட்டை மஞ்சள், 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,000 ரூபாய் சரிவு ஏற்பட்டதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மற்றும் தனியார் கமிஷன் மண்டிகளில், சனிக்கிழமைதோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,769 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,609 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சமாக, 3,369 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 4,569 ரூபாய்க்கும் விற்பனையானது. கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தை காட்டிலும், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு,1,138 ரூபாயும், உருண்டை மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,050 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. ஏலத்தில், மஞ்சள் விலை குவிண்டாலுக்கு திடீரென, 1,000

ரூபாய் விலை குறைந்ததால், மஞ்சள் இருப்பு வைத்துள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஏலத்தில், 1,100 மஞ்சள் மூட்டை, 40 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

**56 மெட்ரிக் டன் பயறு வகை விதைகள் கொள்முதல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,00:33 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் 56 மெட்ரிக் டன் பயறு வகைகள் சான்று பெற்ற விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

விதை சான்று உதவி இயக்குனர் வெங்கடேசன் வெளியிட்ட அறிக்கை: தர்மபுரி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் எட்டு வட்டாரங்களில் பயறு வகை பயிர்களின் 484 எக்டரில் விதைப்பண்ணை அரசு விதை உற்பத்தியாளர்களால் பதிவு செய்யப்பட்டது. இதனை விதை சான்று அலுவலர்கள் உரிய பருவத்தில் வயலாய்வு செய்து மகசூல் கணிப்பு செய்தனர். விதை சான்று அலுவலர்கள் கணித்த மகசூலின்படி விதை உற்பத்தியாளர்கள் அவர் தம் பகுதியில் விதைப்பண்ணை அமைத்த விவசாயிகளிடமிருந்து குவியல்களை தயார் செய்து விதை சான்று அலுவலர்களை அழைத்து சுத்தி அறிக்கை பெற்று சுத்திகரிப்பு நிலையத்துக்கு கொண்டு வந்து இருப்பு வைத்து சுத்தி பணி மேற்கொண்டு விதை மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்பி பகுப்பாய்வு முடிவில் தேறிய குவியலுக்கு சான்று பெற்று விதைகளை சான்று பணி செய்து முடித்த வகையில் இது வரையில் 56 மெட்ரிக் டன் கொள்முதல் செய்து சான்று பணி முடிக்கப்பட்டுள்ளது.

விதை பண்ணை அமைக்கும் விவசாயிகளுக்கு உள்ளூர் அங்காடி விலையுடன் பிரிமியம் ஊக்க தொகை மற்றும் உற்பத்தி மானியம் ஆகியவை சேர்த்து வழங்குவதால், அதிக லாபம் அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டத்தில் 140 விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். நடப்பு நிதியாண்டில் 100 மெட்ரிக் டன் பயறு வகைகள் கொள்முதல் செய்ய திட்டம் அரசிடம் உள்ளது. மேலும் இது குறித்த விபரங்கள் அறிய வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகி அங்குள்ள உதவி விதை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,00:19 IST

செய்துங்கநல்லூர் : செய்துங்கநல்லூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என யூனியன் சேர்மன் கோரிக்கை வைத்துள்ளார். மாவட்ட அளவிலான விவசாயிகள் தொழில்நுட்ப இரண்டு நாள் பயிற்சி செய்துங்கநல்லூர் வணிக வளாகத்தில் நடந்தது. பயிற்சியின்

துவக்க விழாவிற்கு செய்துங்கநல்லூர் நெல் விளை பொருள் உற்பத்தியாளர் குழு தலைவர் குமார் தலைமை வகித்தார். தூத்துக்குடி வேளாண்மை அலுவலர் (வேளாண் வணிகம்) ராஜா வரவேற்றார். கருங்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணபிள்ளை, தோட்டக்கலை உதவி இயக்குனர் ஆல்பிரட் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பயிற்சியினை கருங்குளம் யூனியன் சேர்மன் பிச்சையா துவக்கி வைத்த போது செய்துங்கநல்லூரில் நெல் நேரடி கொள்முதல் நிலையம் அமைக்க அதிகாரிகள் ஒத்துழைப்பு கொடுத்து இங்கு அமைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். அதனை தொடர்ந்து தூத்துக்குடி வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் முருகவேல், திருச்செந்தூர் வேளாண்மை அலுவலர் மணிகண்டன் உட்பட பலர் பயிற்சி கொடுத்தனர். உதவி வேளாண்மை அலுவலர் ராஜா நன்றி கூறினார்.

**கால்நடை மேய்ச்சலுக்கு வனத்துறை கிடுக்கி அனுமதி சீட்டு வழங்குவதில் புதிய நடைமுறை**
பதிவு செய்த நாள் : டிசம்பர் 05,2011,01:00 IST

ஈரோடு: ஈரோடு மண்டல வனப்பகுதியில் கால்நடைகளை மேய்க்க வழங்கப்படும் அனுமதி சீட்டில், புதிய நடைமுறையை மாவட்ட வனத்துறையினர் கையாண்டு வருகின்றனர். வனத்துறை கட்டுப்பாட்டில் உள்ள காப்புக்காடுகளுக்குள் பொதுமக்கள் நுழைய தடை விதிக்கப்பட்டுள்ளது. திறந்த வெளி காடுகளுக்குள், கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்பி பயன்பெற அரசு அனுமதி வழங்கியுள்ளது. மேலும், வனப்பகுதியில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்லும் விவசாயிக்கு இலவச அனுமதி சீட்டு வழங்கவும் வனத்துறைக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டத்தில், ஈரோடு டிவிஷனில் பர்கூர், காங்கயம், அந்தியூர், எஃப்.எஸ்., பெருந்துறை, சென்னம்பட்டியும், சத்தியமங்கலம் டிவிசனிநல் பவானிசாகர், ஹாசனூர், தாளவாடி, டி.என்.பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள காப்புக்காடுகளையும், புதிதாக செடிகள் நடப்பட்ட வனப்பகுதியையும் தவிர, மற்ற வனப்பகுதிக்குள் கால்நடையை மேய்ச்சலுக்கு விட வனத்துறையினர் அனுமதி வழங்கி வந்தனர். அவ்வாறு வனப்பகுதிக்குள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லும் கால்நடைகளால், பிற வன விலங்குகளுக்கு ஆந்த்ராக்ஸ், குடல் புழு உள்ளிட்ட நோய்கள் பரவுவது கண்டறியப்பட்டது. ஈரோடு மாவட்டத்தில் குடல் புழுவால் யானைகள் இறப்பு விகிதம் அதிகரித்தது. இதையடுத்து வனப்பகுதிக்குள் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விட, மாவட்ட வனத்துறையினர் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளனர்.
ஈரோடு மண்டல வனப் பாதுகாவலர் அருண் கூறுகையில், ""வனப்பகுதிக்கு அருகே வசிக்கும் விவசாயிகள், தங்கள் கால்நடைகளுக்கு போதிய மருத்துவப் பரிசோதனை செய்வதில்லை. கால்நடையை வனத்துக்குள் மேய்ச்சலுக்கு விடும் போது, கால்நடையின் சாணத்தில் இருந்து வெளியேறும் உண்ணிகளால், வன விலங்குக்கு நோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

""மாவட்டத்தில் சில மாதமாக யானைகளின் இறப்பு உயர்ந்ததற்கு, கால்நடை உண்ணிகள்தான் காரணம் என்று கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, கால்நடைகளை டாக்டர்கள் பரிசோதித்த விவரம், கால்நடைக்கு எந்த நோயின் தாக்கமும் இல்லை என்ற டாக்டர்களின் உறுதிசான்று உள்ள விவசாயி மட்டுமே, கால்நடைளை மேய்ச்சலுக்கு கொண்டு செல்ல அனுமதிச்சீட்டு வழங்கப்படும். ""மேலும் மரக்கன்று நடவு செய்யப்பட்ட வனப்பகுதியில் கால்நடையை மேய்ச்சலுக்கு விட ஐந்தாண்டு வரை தடை உள்ளது," என்றார்.


**தேங்காய் நார் கயிறு இலவச தொழிற் பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2011,22:10 IST

மதுரை : மதுரை சிம்மக்கல் டேசட் பயிற்சி மையத்தில், சென்னை இட்காட் நிறுவனம் சார்பில், தேங்காய் நார், கயிறு தயாரித்தல் குறித்த இலவச தொழிற் பயிற்சி டிச.,8 - 10 வரை நடக்க உள்ளது. மண் அரிப்பை தடுக்கும் விரிப்புகள், கைத்தறி மிதியடி, ரப்பரில் பதிக்கப்பட்ட தேங்காய் நார் மிதியடி தயாரிக்கும் பயிற்சி, மூலப்பொருள் விவரங்கள் வழங்கப்படும். டேசட் மையத்தில் முன்பதிவு செய்யலாம். தகவல் பெற, 94875 59345 ல் தொடர்பு கொள்ளலாம்.

**உணவு தானிய உற்பத்தி 3 சதவீதம் உயர்வு**

டிசம்பர் 04,2011,23:40




புதுடில்லி: நாட்டின் உணவு தானிய உற்பத்தி, நடப்பு 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தின் (2007-2012), முதல் நான்கு நிதியாண்டுகளில், 2.90 சதவீதம் அதிகரித்துள்ளது என, மத்திய வேளாண் இணை அமைச்சர் ஹரிஷ் ராவத் தெரிவித்தார்.நடப்பு, 11வது ஐந்தாண்டு திட்ட காலத்தின், முதல் நான்கு ஆண்டுகளில், நாட்டின் உணவு தானிய உற்பத்தி, 23.45 கோடி டன்னிலிருந்து, 24.16

கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இருப்பினும், கடந்த 2009-10ம் நிதியாண்டில், நாட்டில் பல மாநிலங்களில் ஏற்பட்ட வறட்சியால், அவ்வாண்டில் உணவு தானிய உற்பத்தி, 21.81 கோடி டன்னாக குறைந்திருந்தது.குறிப்பாக, பீகார், ஜார்க்கண்ட், உத்தரபிரதேசத்தின் கிழக்கு பகுதி, மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில், வறட்சி காரணமாக அவ்வாண்டில், உணவு தானிய உற்பத்தி குறைந்து போயிருந்தது.

**பயிர் இன்சூரன்ஸ் செய்ய அழைப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2011,21:32 IST

கருத்தை பதிவு செய்ய

ஆர்.எஸ்.மங்கலம் : திருவாடானை மற்றும் ஆர்.எஸ்.மங்கலம் ஒன்றியங்களில் ஒரு லட்சத்து 7 ஆயிரத்து 500 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வெள்ளம், பூச்சி தாக்குதல்களால் மகசூல் இழப்பு ஏற்பட்டால் தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டத்தில் கீழ் காப்பீடு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் குத்தகைதாரர் உட்பட அனைத்து விவசாயிகளும் பயிர் இன்சூரன்ஸ் செய்யலாம். நடப்பு சம்பா பருவத்திற்கு ஏக்கருக்கு 8,324 ரூபாய் காப்பீட்டுத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் இரண்டு சதமான 166 ரூபாய் பிரிமியம் தொகை. சிறு, குறு விவசாயிகள் ஏக்கருக்கு 75 ரூபாயும், இதர விவசாயிகள் ஏக்கருக்கு 83 ரூபாயும் பிரிமியமாக செலுத்த வேண்டும். மீதி பிரிமியத்தொகையை அரசே ஏற்கும். கடன் பெறாத விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலோ அல்லது தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்திலோ பிரிமியத்தை செலுத்தலாம். கடன் பெறாத விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் செய்ய டிச.,15 கடைசி. பயிர் இன்சூரன்ஸ் செய்யும் போது உரிய படிவம் மற்றும் பயிர் சாகுபடி செய்ததற்கான 10-1 நகல் மற்றும் அடங்கல் ஆகியவற்றை கொண்டு செல்ல வேண்டும்.

**வேளாண் கழிவுகளில் இருந்து "பயோசார்' கண்டு பிடிப்பு**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2011,21:21 IST

காரைக்குடி : செட்டிநாடு, மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் பாலசுப்பிரமணியன் கூறியதாவது: செம்மண்ணுக்கு ஏற்ற நிலக்கடலை மற்றும் குதிரைவாலி பயிர்களில் புதிய ரகத்தை உருவாக்குவது பற்றியும், துவரை விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரமய மாக்குதல் மேலாண்மை உத்திகளை உருவாக்குதல், நிலக்கடலை மற்றும் பயிர் வகை பயிர்களில் புதிய வகையான பூச்சி மற்றும் நோய் கொல்லிகளை பரிசோதித்தல், உளுந்தில் வல்லுநர் விதை

உற்பத்தி ஆய்வு நடக்கிறது. வெப்பமயமாக்குதலை தடுக்கும் பொருட்டு, வேளாண் கழிவுகளில் இருந்து "பையோசார்' எனப்படும் கரிவகை தயாரிக்கும் முறை குறித்து ஆய்வு நடக்கிறது. பையோசார் இடுவதால் மண்ணின் அங்கத் தன்மை, பவுதீக தன்மை மற்றும் உயிரியியல் பண்பு மேம்படும். விவசாயிகளுக்கு எளிதில் கிடைக்கும் உரங்களுடன் இதை கலந்து ஒரு புதிய வகை மேம்பட்ட உரமாக தயாரிக்கவும் ஆய்வு செய்யப்படுகிறது, என்றார்.

**பயறு வகை பயிரிட பயிற்சி**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2011,21:21 IST

சிவகங்கை : மாவட்டத்தில் பயறு வகைகளின் உற்பத்தியை பெருக்கும் வகையில், மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலையத்தில், விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. முதன்மை வங்கி மேலாளர் பெருமாள் தலைமை வகித்தார். மானாவாரி வேளாண் ஆராய்ச்சி நிலைய தலைவர் பாலசுப்பிரமணியன் பயறு வகைகளில் உள்ள ரகம், உர நிர்வாகம், ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம், இயந்திரங்களை கையாள்வது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். ஐ.டி.சி., வேளாண் வணிகப்பிரிவின் வேளாண் விரிவாக்க அலுவலர் அருள்குமார் நன்றி கூறினார்.

**6,400 டன் உரம் ஈரோடு வருகை**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2011,01:44 IST

ஈரோடு: ஈரோட்டுக்கு, 3,500 டன் யூரியா, 2,600 டன் பொட்டாஷ், 300 டன் 20-20 காம்ப்ளக்ஸ் உரங்கள் வந்தன.
ஒடிஸா மாநிலத்தில் இருந்து ரயில் மூலம், ஈரோட்டுக்கு, "இஃப்கோ' நிறுவனத்தின் 2,500 டன் யூரியா ரயில் மூலம் வந்தது. இவை அனைத்தும் லாரிகள் மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.இன்டியன் பொட்டாஷ்' நிறுவனம் இறக்குமதி செய்த 2,600 டன் பொட்டாஷ், மங்களூரு துறைமுகத்தில் இருந்தும், ஆந்திரா மாநிலம் "கோரமண்டல்' நிறுவனத்தில் இருந்து 1,000 டன் யூரியா, 300 டன் 20-20 காம்ப்ளக்ஸ் உரமும் ஈரோடு வந்தது. இவை தனியார் மூலம் விற்பதற்காக அனுப்பி வைக்கப்பட்டது.வேளாண் அதிகாரிகள் கூறுகையில், ""ஈரோடு மாவட்டத்தில் பற்றாக்குறை போக்குவதற்காக வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட உரங்கள் வந்துள்ளன.ந்த உரங்கள் அனைத்தும் அரசு நிர்ணயித்துள்ள விலையில் மட்டுமே விற்க வேண்டும். விவசாயிகள் தங்கள் தேவைக்கு உரங்களை பெற்றுக் கொள்ளலாம்,'' என்றனர்.கரடி கடித்த முதியவர் நிவாரணத்துக்கு ஏக்கம்கோபிசெட்டிபாளையம்: தொட்டகொம்பை கிராமத்தில்

மழையால் பாதிக்கப்பட்ட 58 குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கிய போது, கரடி கடித்ததாக தெரிவித்த முதியவரை எம்.எல்.ஏ., ரமணீதரன் மற்றும் வனத்துறை உள்ளிட்ட ஒருவரும் கண்டு கொள்ளாததால் மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.கோபி அருகே தொட்டகொம்பை மலை கிராமத்தில், 100க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன.

சமீபத்தில் பெய்த பலத்த மழையால் கிராமத்தில் உள்ள பல வீடுகள் விரிசல் அடைந்தன. வீடுகள் கட்டி பல ஆண்டுகளாவதால் வீடுகளில் உள்ள ரீப்பர் கட்டைகள் கரையான் அரித்துள்ளன.மழையால் பாதிக்கப்பட்ட, 58 குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சி தொட்டகொம்பையில் நேற்று நடந்தது. கருப்பாறையில் இருந்து தொட்டகொம்பை வரை ஆறு கிலோ மீட்டர் தூரம் வனப்பகுதியாக அமைந்துள்ளது. கரடு முரடான பாதையில் வருவாய்த் துறை, வனத்துறை மற்றும் அரசியல் பிரமுகர்கள் கார் மற்றும் டூவீலரில் சென்றனர்.

பாதிக்கப்பட்ட, 58 குடும்பத்தினருக்கு தலா, 10 கிலோ ரேஷன் அரிசி, ஒரு லிட்டர் மண்ணெண்ணெய், வேட்டி, சேலை மற்றும் 2,500 ரூபாய் ஆகியவை வழங்கப்பட்டது.தொட்டகொம்பையை சேர்ந்த பெருமாள் (60), மைத்துனர் குருசாமி (65) ஆகியோர், சில நாட்களுக்கு முன் தொட்டகொம்பை வனப்பகுதிக்கு விறகு பொறுக்க சென்றனர். கரடி ஒன்று, பெருமாளின் இடது காலை கடித்து குதறியது.

இருவரும் அங்கிருந்து தப்பித்து வந்துள்ளனர்.அரசு விழாவில், அதிகாரிகளிடம் தனது குறையைக் கூற, காலில் காயத்துடன் முதியவர் பெருமாள் அமர்ந்திருந்தார். நிகழ்ச்சி முடிந்தவுடன், கரடி கடித்த விபரத்தை ரேஞ்சர் பழனிசாமியிடம் தெரிவித்தார். ரேஞ்சர் பழனிசாமி, "தொட்டகொம்பை வனப்பகுதியில் கரடி இல்லை. கரடி இருந்தால் எங்களுக்கு தெரிந்திருக்கும்.

எதற்காக பொய் சொல்கிறாய்?' என சத்தம் போட்டார்; முதியவர் அமைதியானார். எம்.எல்.ஏ., ரமணீதரன், ஆர்.டி.ஓ., பழனிசாமி ஆகியோரும், இதை கண்டுகொள்ளவில்லை.வேதபாறையில் அணை அமைக்க வேண்டும் என, 40 ஆண்டுகளாக அப்பகுதி விவசாயிகள் கோரி வருகின்றனர். எம்.எல்.ஏ., மற்றும் அதிகாரிகள் வேதபாறையை பார்வையிட்டனர்.விவசாயிகள் கூறுகையில், "வேதபாதையில் அணை அமைக்க வேண்டும் என, 40 ஆண்டுகளாக கோரி வருகிறோம். அணை அமைக்கப்பட்டால் கணக்கம்பாளையம், பெருமுகை, கொண்டையம்பாளையம் ஆகிய மூன்று பஞ்சாயத்துகளில் உள்ள, 15 ஊர்கள் பயன்பெறும். 2,000 ஆயிரம் ஏக்கர் பாசனமும், மறைமுகமாக 1,500 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெறும்' என்றனர்.அணையை எம்.எல்.ஏ., பார்வையிட்ட போது, பொதுப்பணி துறை மற்றும் வனத்துறை அதிகாரிகள் எவரும் இல்லாததால், அணைத் திட்டம் குறித்து விளக்க யாருமில்லாமல் போனது.

**"பழசை' சாப்பிட்டு பலியாகும் ஆடுகள் கால்நடை அதிகாரி அதிர்ச்சித் தகவல்**

பதிவு செய்த நாள் : டிசம்பர் 04,2011,22:11 IST

அன்னூர்:"வீட்டில் மீதமாகும் உணவுகளை ஆடுகளுக்கு கொடுப்பதால் அவை இறக்கும் அபாயம் உள்ளது'என, கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.இலவச ஆடுகள் வழங்கும் திட்டம் குறித்து விளக்கம் அளிக்க, அ.மேட்டுப்பாளையத்தில் கிராமசபை கூட்டம் நடந்தது.

ஊராட்சி தலைவர் ஜெயஸ்ரீ தலைமை வகித்து பேசுகையில்,""சொந்தமாக நிலமும், ஆடும் இல்லாத விவசாய பெண் தொழிலாளிகள் இத்திட்டத்தில் ஆடுகள் பெற விண்ணப்பிக்கலாம். வரும் 8ம் தேதிக்குள் ரேஷன் கார்டு நகலுடன் விண்ணப்பிக்க வேண்டும். 9ம் தேதி சிறப்பு கிராமசபை கூட்டத்தில் பயனாளிகள் அறிவிக்கப்படுவர்," என்றார்.

கோவை கால்நடை பராமரிப்பு உதவி இயக்குனர் (பொறுப்பு) வரதராஜ் பேசியதாவது:ஆடுகளை வாங்கியவுடனே கால்நடை துறை சார்பில் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு, ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசியும் போடப்படும். ஆடுகளை கவனமாக வளர்க்க வேண்டும்.

வீடுகளில் மீதமாகும் சாப்பாடு, இட்லி, தோசை, மாவு ஆகியவற்றை சிலர் ஆடுகளுக்கு உணவாக கொடுக்கின்றனர். இதை சாப்பிடும் ஆடு 24 மணி நேரத்திற்கு பின் செரிமானம் ஆகாமல், வயிறு உப்புசம் ஏற்பட்டு, கழிசல் நோய்க்கு ஆளாகி இறக்கிறது. பல இடங்களில் ஆடுகள் நோய்வாய்ப்பட்டுள்ளன.

இலை, தழை, புல் மற்றும் கஞ்சி கொடுக்கலாம்.சரியான பசும்தீவனம் கொடுத்தால் வாங்கிய ஒரே ஆண்டில் ஆடு பருவத்துக்கு வந்து விடும். அதிலிருந்து ஐந்து மாதங்களில் குட்டி போட்டு விடும். நான்கு ஆடு வாங்குவோர் இரண்டு ஆண்டுகளில் அந்த தொகையை விட இரண்டு மடங்கு சம்பாதிக்கலாம்.

இவ்வாறு உதவி இயக்குனர் வரதராஜ் பேசினார்.கால்நடை உதவி மருத்துவர் சுமித்ரா, ஊராட்சி துணை தலைவர் காந்தாமணி உட்பட பலர் பங்கேற்றனர்.

தினகரன்

முற்றுகிறது முல்லைப்பெரியாறு விவகாரம் கேரள எல்லையில் பதற்றம்

பதிவு செய்த நாள் : 12/5/2011 12:08:54 AM



மதுரை : முல்லைப் பெரியாறு அணை பிரச்னை முற்றுகிறது. கேரளாவில் அரசு மற்றும் அரசியல் கட்சிகள் இந்தப் பிரச்னையை பூதாகாரமாக்கி, மக்களிடையே பீதியை ஏற்படுத்தி வருகின்றன. இதனால் தமிழக எல்லைப் பகுதியிலும் பெரியாறு அணை பகுதியிலும் வன்முறை ஏற்படும் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பெரியாறு அணை பிரச்னையில் பதற்றத்தை தணிக்க தமிழகம் மற்றும் கேரள உயர் அதிகாரிகளின் கூட்டத்தை மத்திய அரசு இன்று நடத்த ஏற்பாடு செய்திருந்தது. ஆனால், இந்த பேச்சுவார்த்தையால் எந்த பயனும் ஏற்படாது என்பதால் இந்த கூட்டத்தில் பங்கேற்க தமிழக அரசு மறுத்துவிட்டது. இதனால், அடுத்து என்ன செய்வது என்பது பற்றி மத்திய அரசும் தீவிர ஆலோசனையில் ஈடுபட்டுள்ளது.

இந்த சூழ்நிலையில் தமிழக எல்லையில் கேரளத்தைச் சேர்ந்த கட்சிகள் மற்றும் உள்ளூர் அமைப்புகள் வன்முறை மற்றும் பதற்றத்தை ஏற்படுத்தும் செயல்களை அரங்கேற்றி வருகின்றனர். அடாவடி வசூல்: புதிய அணை கட்ட தமிழகத்தை சேர்ந்த ஜீப்களுக்கு தலா ணீ100 கட்டணம் செலுத்த வேண்டும் என கேரள மாநில நுழைவு வாயிலில் அடாவடி வசூலில் சில அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர். இதனால் தமிழகத்தை சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள் பணிக்கு செல்ல முடியாமல் பாதியிலே வீடு திரும்பியதாக கம்பத்தில் இருந்து வந்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைப் பெரியாறு அணைக்கு பதிலாக புதிய அணை கட்ட கேரள அரசு தீவிரம் காட்டி வருகிறது. கேரளாவில், தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரிக்க துவங்கியுள்ளது. நேற்று முன்தினம் பெரியாறு அணை பகுதிக்குள் அத்துமீறி புகுந்து, தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடும் தலைமதகு பகுதிக்குள் நுழைந்த அம்மாநில இளைஞர் காங்கிரசார் அராஜகத்தில் ஈடுபட்டனர்.

தேனி மாவட்டத்தில் சின்னமனூர், உத்தமபாளையம், கம்பம், கூடலூர், கோம்பை, தேவாரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கேரள மாநிலம் நெடுங்கண்டம், கட்டப்பணை, மேட்டுக்குழி, மாலி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஏலம், காபி தோட்டங்களுக்கு தொழிலாளர்கள் வேலைக்கு சென்று வருகின்றனர். தோட்ட உரிமையாளர்கள் ஜீப்களை மாத வாடகைக்கு பேசி, தொழிலாளர்களை வேலைக்கு அழைத்து செல்வர். தமிழ்நாட்டை சேர்ந்த 600 ஜீப்கள் கேரள மாநிலத்திற்கு தினசரி தோட்ட தொழிலாளர்களை ஏற்றி சென்று வருகின்றன.

நேற்று காலை வேலையாட்களுடன் சென்ற ஜீப்களை கம்பம் மெட்டு கேரள எல்லையில் கேரள மாநிலத்தவர்கள் மறித்தனர். அவர்கள் பெரியாறில் புதிய அணை கட்ட வேண்டும். அதற்கு பணம் வசூலிக்கும்படி அரசு அறிவுறுத்தியுள்ளது. இதனால் ணீ100 தர வேண்டும் என்று தகராறு செய்தனர். பணத்தை வாங்கிக் கொண்டு, டிரைவர் அசோசியேசன் என்று மலையாளத்தில் அச்சடித்த ரசீதை கொடுத்தனர்.

அதில், எந்த பதிவெண்ணும் கிடை யாது. இதனால் சந்தேகமடைந்த சில ஜீப் டிரைவர்கள், பணம் கொடுக்க முடி யாது என்றனர். ஆத்திரமடைந்த அக்கும்பல், வேனில் அமர்ந்திருந்த தமிழகத்தை சேர்ந்த பெண்களை ஜீப்பை விட்டு இறங்குமாறு ரகளையில் ஈடுபட்டனர். இதனால் கேரளாவில் பணியாற்றும் தமிழகத்தை சேர்ந்த தோட்ட தொழிலாளர்கள் பணிக்கு செல்ல முடியாமல் வீடு திரும்பினர்.

பா.ஜ கட்சியினர் கைது: பெரியாறு அணையில் உள்ள பேபி அணைப் பகுதிக்கு சென்ற பா.ஜ. கட்சியினர் 18 பேர் கைது செய்யப்பட்டனர். கேரள எல்லையில் தொடர்ந்து பதற்றம் நிலவுகிறது. கேரள அரசியல் கட்சியி னரின் அத்துமீறும் செயல் களால் அணைப் பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்நிலையில், நேற்று கேரள பா.ஜ. கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்கள் வல்லக் கடவு பகுதியில் போராட்டத்தில் ஈடுபட்டனர். பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி வழியாக 6 கி.மீ. தூரம் சென்றால் பெரியாறு அணைக்கு செல்லலாம்.

இப்பகுதி வழியாக ரகசியமாக இடுக்கி மாவட்ட பா.ஜ. இளைஞரணி தலைவர் சந்தோஷ்குமார் தலைமையில் அக்கட்சியை சேர்ந்த 18 பேர் சென்றனர். அவர்கள் பெரியாறு அணை அருகேயுள்ள பேபி அணையில் ஏறி பெரியாறு அணையை உடைப்போம் என கோஷமிட்டனர். மேலும் அங்கு பா.ஜ. கட்சி கொடியை ஏற்றினர். இது குறித்து தாமதமாக தகவலறிந்த கேரள போலீசார் அப்பகுதிக்கு விரைந்து சென்றனர். அங்கிருந்த 18 பேரையும் கைது செய்தனர்.

கேரள போலீஸ் பாதுகாப்பு: பெரியாறு அணையில் கேரள போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது கேரள அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக் கொண்டு பெரியாறு அணையை உடைப்போம் என அத்துமீறி வருகின்றன. நேற்று பாரதிய ஜனதா கட்சியினர், காங்கிரசுக்கும் தாங்கள் சளைத்தவர்களல்ல என்ற பாணியில் கடப்பாரைகளுடன் அணையை உடைப்பதற்கு சென்றனர்.
மத்திய படை பாதுகாப்பு: பெரியாறு அணையை உடைக்கும் முயற்சியில் கேரள அரசியல் கட்சியினர் பல்வேறு சுயநல சக்திகள் ஈடுபட்டுள்ளன. இதுவரை மக்களிடையே பீதியை ஏற்படுத்திய இந்த சக்திகள் தற்போது அணையை உடைக்கும் செயலலிலும் ஈடுபடத் தொடங்கிவிட்டனர்.
எனவே தென்தமிழகத்தின் வாழ்வாதாரமாக விளங்கும் பெரியாறு அணையை பாதுகாக்க கேரள போலீசாரைவிட மத்திய ரிசர்வ் போலீஸ் படையை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. பெரியாறு அணையின் பாதுகாப்பு தற்போது கேள்விக் குறியாகி உள்ளது. இதனால் அணைப் பகுதிக்கு மத்திய ரிசர்வ் படை பாதுகாப்பு வழங்க வேண்டும் என கம்பம் பள்ளத்தாக்கு விவசாயிகள் சங்கக் கூட்டத்தில் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

குறும்பட சிடி இன்று முதல் ஒளிபரப்பு

கேரளாவின் சில அரசியல் கட்சியினர் கிராபிக்ஸ் சிடிக்களை டிவிடியாக தயார் செய்து இடுக்கி உள்ளிட்ட மாவட்டங்களுக்கு இலவசமாக சப்ளை செய்தனர். தொடர்ந்து ‘டேம் 999Õ படம் புதிய சர்ச்சையை கிளப்பியுள்ளது. கேரள அரசின் செயல்பாட்டுக்கு பதிலடி தரும் வகையில், பெரியாறு அணை சம்பந்தமாக தமிழக பொதுப்பணித் துறைகளின் பொறியாளர் குழுவினர், கட்டுமான நிறுவனங்களை சேர்ந்த பொறியாளர் வல்லுநர் குழுவினர் தந்த அறிக்கையின் அடிப்படையிலும் 45 நிமிடம் ஓடக்கூடிய குறும்படத்தை விவசாயிகள் தயார் செய்துள்ளனர். இன்று முதல் ஒளிபரப்பாகும். புதிய அணை கட்டினாலோ அல்லது அணையை இடிக்கும் முயற்சியில் இறங்கினாலோ தென்மாவட்டங்களில் சோமாலியா நாட்டில் நிலவும் பஞ்சம், பசி, பட்டினி ஏற்படும். குடிநீருக்கே திண்டாட்டம் ஏற்படும் நிலை உருவாகும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

**மல்லிகை பூ கிலோ ரூ.2000**

பதிவு செய்த நாள் : 12/5/2011 12:14:39 AM



ஆரல்வாய்மொழி: குமரி மாவட்டம், தோவாளை மார்க்கெட்டில் நேற்று மல்லிகை பூ விலை கிலோ ரூ.2000 ஆக உயர்ந்தது. குமரி மாவட்டம் தோவாளையில் பிரசித்தி பெற்ற பூ மார்க்கெட் உள்ளது. பெங்களூர், ஓசூர், திண்டுக்கல், மதுரை, ராஜபாளையம் உள்ளிட்ட பல்வேறு இடங் களில் இருந்து இங்கு பூக்கள் விற்பனைக்கு வருகின்றன. தற்போது கார்த்திகை மாதம் என்பதாலும், அதிக முகூர்த்த நாட்கள் இருப்பதாலும் பூக்களின் விலை கடுமையாக உயர்ந்து வருகின்றன. வழக்கமாக கிலோ ரூ.250, 300 ஆக இருக்கும் மல்லிகை பூவின் விலை, கார்த்திகை மாத தொடக்கத்தில் ரூ.500 ஆக உயர்ந்தது. நேற்று முன்தினம் 3 மடங்கு விலை உயர்ந்து கிலோ ரூ.1500க்கு விற்கப்பட்டது. இந்நிலையில் நேற்று அது மேலும் அதிகரித்து கிலோ ரூ.2000 என விற்கப்பட்டது. தோவாளை மார்க்கெட் வரலாற்றில் இதுவே அதிகபட்சமாகும்.

**தானியங்கள் இறக்குமதி 18 சதவீதம் குறைந்தது**

பதிவு செய்த நாள் : 12/5/2011 12:14:20 AM



புதுடெல்லி: நடப்பு 2011&12ம் நிதியாண்டில் நவம்பர் மாதம் வரை தனியார் வர்த்தகர்களால் மேற்கொள்ளப்படும் தானியங்களின் இறக்குமதி 18 சதவீதம் சரிந்தது.
ஜூலை&ஜூன் (2010&11) பருவத்தில் நாட்டின் தானிய உற்பத்தி 1.8 கோடி டன்னாக அதிகரித்தது. அதனால் 2011&12ன் நவம்பர் மாதம் வரையிலான தனியார் வர்த்தகர்களின் தானிய இறக்குமதி 22 லட்சம் டன்னாக குறைந்தது.

2010&11ன் இதே காலத்தில் இது 27 லட்சம் டன்னாக இருந்தது. ரூபாய் மதிப்பு சரிவு காரணமாக இறக்குமதிக்கு 15 சதவீதம் வரை அதிகமாக செலவு ஏற்பட்டது. மொத்த தானிய நுகர்வில் 20 சதவீதம் இறக்குமதியை நம்பியுள்ளதால், உள்நாட்டில் தானிய விலை அதிகரிக்கும் என்று தானியங்கள் மற்றும் வித்துக்கள் அமைப்பின் தலைவர் பிரவீன் டோங்ரா தெரிவித்தார். உலக அளவில் தானியங்கள் இறக்குமதி மற்றும் நுகர்வில் இந்தியா முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

## *முல்லை பெரியாறு அணை பிரச்சினையில் பிரதமர் தலையிட்டு சுமூக தீர்வு காண்பார் கோவையில் மத்தியமந்திரி வயலார் ரவி பேட்டி*

*கோவை,டிச.5–*
*முல்லை பெரியாறு அணை பிரச்சினையில் பிரதமர் மன்மோகன் சிங் தலையிட்டு சுமூக தீர்வு காண்பார் என்று கோவையில் மத்திய மந்திரி வயலார் ரவி கூறினார்.*
*கோவையில் வயலார் ரவி*
*மத்திய சிவில் விமானப் போக்குவரத்து துறை மந்திரி வயலார் ரவி நேற்று மாலை 4.30 மணிக்கு டெல்லியில் இருந்து விமானம் மூலம் கோவை வந்தார். அவரை கோவை மாநகர் மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.சின்னையன், முன்னாள் மேயர் ஆர்.வெங்கடாசலம், முன்னாள் எம்.எல்.ஏ. மகேஷ்வரி, பி.எஸ்.சரவணக்குமார் ஆகியோர் வரவேற்றனர்.*
*பிரதமர் சுமூக தீர்வு காண்பார்*
*பின்னர் அவரிடம் முல்லை பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக கேட்ட போது அதற்கு வயலார் ரவி கூறியதாவது:–*
*தமிழகமும், கேரளாவும் சகோதரத்துவ மாநிலங்கள். முல்லை பெரியாறு அணை பிரச்சினை*

தொடர்பாக இரு மாநில முதல்–மந்திரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். இந்த பிரச்சினையில் பிரதமர் மன்மோகன் சிங் தலையிட்டு சுமூக தீர்வு காண்பார்.

இந்தியாவில் கோவை விமான நிலையம் உள்பட 85 விமான நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. கோவை விமான நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

பாலக்காடு சென்றார்

அப்போது கவுன்சிலர்கள் மகேஷ்குமார், காயத்ரி, இருகூர் சுப்பிரமணியம், மற்றும் மகேந்திரன், பரமசிவம், கேபிள் மகேஷ், பாக்கியராஜ், செல்லமுத்து மற்றும் பலர் உள்ளனர். அதன் பின்னர் வயலார் ரவி கார் மூலம் பாலக்காடு சென்றார். அங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளில் அவர் கலந்து கொண்டார்.